

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகம் சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனையில் 27.11.2025 அன்று பிறந்த குழந்தைகளுக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தங்க மோதிரம் அணிவித்து மகிழ்ந்தனர். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, கவிச்சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் தொண்டைமான், மேயர் திலகவதி செந்தில், அரு.வீரமணி, துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ். சுப.சரவணன், சு.சண்முகம், மு.க.ராமகிருஷ்ணன், சி.சண்முகம், எம்.எம்.பாலு, செந்தாமரைபாலு, அ.ரெத்தினம், பூங்குடி எம்.சிவா, கவிவேந்தன், சி.அரங்கநாயகம், டி. செல்வம், வடவாளம் க.செ.மணிமாறன், டி. அப்புக்காளை, செ.கணேஷ், ராமச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம் சார்பில் ஏற்கனவே இயங்கி வந்த பழைய பேருந்துகளுக்கு பதிலாக 06 புதிய BSVI நகரப்பேருந்துகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, மற்றும் பலர் உள்ளனர்.

### நெல்லை மாவட்டம் – ‘எங்கள் கல்லூரி’

# ‘எங்கள் பெருமை’முன்னாள் மாணாக்கர்கள் சங்கம்!

### பேரவைத் தலைவர் மு. அப்பாவு - அமைச்சர் கோவி.செழியன் தொடங்கி வைத்தனர்!



நெல்லை, டிச.1-

நெல்லை மாவட்டம் ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் (29112025) அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் “எங்கள் கல்லூரி” “எங்கள் பெருமை” முன்னாள் மாணாக்கர்கள் சங்கத்தினை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து முன்னாள் மாணாக்கர்கள் சங்கத்திற்கு புத்தகங்கள், மடிக்கணினிகள்,குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்,தையல் இயந்திரங்கள் விளையாட்டு உபகரணங்கள் போன்றவற்றை நன்கொடையாக வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வித்துறையில் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட காரணத்தினால் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ‘புதுமைப்பெண்’ என்ற திட்டத்தினை அறிவித்தது மட்டுமல்லாமல் அதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து வழங்க வருகிறார்கள்.பெண்களின் உயர் கல்வியை உறுதி செய்வதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் புதுமைப்பெண் திட்டம் உதவியாக அமைந்துள்ளது.என மாணவியர்கள் தெரிவித்து வருகின்றனர். அரசு கல்லூரிகளில் முன்னாள் மாணவர் சங்கம் தொடங்க வேண்டும் என சட்டமன்றத்தில் முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அனைத்து பிரிவு மாணவிகளுக்கும் சமமான உயர்வான கல்வியை வழங்கும் உயரிய நோக்கத்தோடு தென்தமிழகத் தில் உருவான முதல் அரசு பெண் கல்லூரிக்கு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின் படி இந்தியாவில் இக்கல்லூரியில் “எங்கள் கல்லூரி” “எங்கள் பெருமை” முன்னாள் மாணாக்கர்கள் சங்கத்தினை துவக்கி வைப்பதில் பெருமைப்படுகிறேன்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

முன்னதாக உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டங்களான “நான் முதல்வன்” “புதுமைப்பெண்” மற்றும் “தமிழ் புதல்வன்” ஆகியவற்றின் பயன்களை முழுமையாக மாணாக்கர்களுக்கு சென்றடைய தேவையான அனைத்து பணிகளையும் ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டும்.மேலும் கல்லூரிகளில் செயல்பட்டு வரும் போதை ஒழிப்புச் சங்கத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி தமிழ்நாடு போதை இல்லா மாநிலமாக விளங்கிட பேராசிரியர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும்.

மேலும் இங்கு பயின்று பொருளாதாரத்தில் உயர்ந்துள்ள முன்னாள் மாணாக்கர்களை கல்லூரியின் அங்கமாக இணைத்து இக்கல்லூரிக்கு தேவையான உதவிகளை பெறுவதற்கு இன்று தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க துவங்க உள்ள சங்கம் வழிவகுக்கிறது.கல்லூரியின் தேவைகளையும் அதனை நிறைவேற்றி தரக்கூடிய முன்னாள் மாணாக்கர்களை இணைக்கும் பாலமாக இச்சங்கம் இங்கு உருவாக்கப்படுகிறது.பள்ளியோடு படிப்பை முடிக்கும் இடைநிற்றல் என்பது நெல்லை மாவட்டத்தில் இல்லை என்பது பெருமைக்குரிய விஷயமாக உள்ளது.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தொடங்கப்பட்ட “முன்னாள் மாணாக்கர்கள் சங்கம்” தொடர்பான பணிகளை விரைந்து செயல்படுத்தி முன்னாள் மாணாக்கர் களைக் கொண்டு தங்களுடைய கல்லூரியினை மேலும் சிறப்பாக செயல்பட வைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும்.அரசின் வழிகாட்டுதலின்படி பல்வேறு உறுப்பினர்களைக் கொண்டும் பிற துறை வல்லுநர்களைக் கொண்டும் இச்சங்கமானது நிர்வகிக்கப்பட்டு செயல்படுவதற்கான தொடக்கமாக இந்நிகழ்வு உள்ளது. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இக்கல்லூரியில் பயின்று பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றி வரும் முன்னாள் மாணாக்கர்களை கொண்டு தற்போது பயிலும் மாணவிகளுக்கு பல்வேறு பயிற்சி பட்டறைகளும், திறன் வளர்ப்பு பட்டறைகளும், தொழில் முனைவோர்ம பயிற்சிகளும் சிறப்பாக துவங்க உள்ளது.மாணவியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி நல்வழிப்படுத்தி அவர்களுடைய எதிர்காலத்தை மேன்மை அடைய செய்து கொள்ள வேண்டும்.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று சொன்ன காலம் மாறிவிட்டது. வெளி மாநிலங்களில் பெயருக்கு பின்னால் ஜாதி பெயர் இருக்கும்.ஆனால் திராவிட இயக்கத்தின் முயற்சியால் தான் தமிழகத்தில் ஒவ்வொரு பெயருக்கும் பின்னாலும் பட்டப்படிப்பின் பெயர்கள் இடம் பெறுகிறது.மூட பழக்க வழக்கம் ஜாதி பேதத்திற்கு இங்கு இடமில்லை. சமூக நீதி கல்விக்கும்,அறிவியல் கல்விக்கும் முக்கியத்துவம் தருவதுதான் திராவிட மாடல் ஆட்சியின் லட்சியம்.என சொல்லும் முதல்வர் அவர்களின் கரத்தை வலுப்படுத்த முன்னாள் மாணவர் மன்றம் பயன்படட்டும்.

இவ்வாறு அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேசினார்.


தொடர்ந்து ராணி அண்ணா மகளிர் கல்லூரி வளாகத்தில் உள்ள மாணவியர் விடுதியினையும் மற்றும் மாற்றுத் திறனாளி ஆய்வகத்தினையும் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தலைமையில் நடைபெற்ற கல்லூரி முதல்வர்களுடான ஆய்வு கூட்டத்தில் 2021 2025 வரை தொடங்கப்பட்ட பாடப்பிரிவுகளின் மாணவர்களின் சேர்க்கை விவரங்கள்,கடந்த மூன்று ஆண்டுகளில் மாணவர்களின் தேர்ச்சி விவரங்கள், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர்களின் விவரங்கள், கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நலத்துறை விடுதிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் “நான் முதல்வன்” “புதுமைப்பெண்” மற்றும் “தமிழ் புலவன்” ஆகிய திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்துவது,போதை ஒழிப்பு சங்கத்தின் செயல்பாடுகள், நிறுவன மேலாண்மை குழு மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் பாலின உளவியல் குழுவின் செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் டி.பி.எம் மைதீன் கான், தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக் குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி,மாநகராட்சி நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி, நெல்லை மண்டல கல்வி கல்லூரி இணை இயக்குனர் முனைவர் விக்டோரியா தங்கம்,இணை இயக்குனர்கள் சிந்தியா செல்வி,லட்சுமி,

ராணி அண்ணா மகளிர் கல்லூரி முதல்வர் சுமிதா மற்றும் அரசு அலுவலர்கள்,ஆசிரியர்கள்,மாணவியர் கள்,முன்னாள் மாணவியர்கள், பெற்றோர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அறிவாலயத்தின் தாய்!



அய்யாவின் காட்சியும் நீ...!
அண்ணாவின் ஆட்சியும் நீ...!
வையத்தில் சமதர்மம் நீ...! வசந்தத்தின்
சாட்சியும் நீ...!
ஏழையர்கள் கிழக்கும் நீ...! ஈரடியின்
வாக்கும் நீ...!
கலைஞரது இதயம் நீ...! கம்பீர உதயம் நீ...!

புரட்சியின் பூ முகம் நீ...! பொது மக்கள்
கேடயம் நீ...!
மக்களாட்சி மகத்துவம் நீ...! மாநிலத்தின்
தனித்துவம் நீ...!
வீடெங்கும் தேடி வந்து வேதனையைத்
தீர்த்தவன் நீ...!
ஏடெங்கும் போற்றுகிற ஏற்றத்தைச்
சேர்த்தவன் நீ...!

நாடெங்கும் கல்வியிலே நலம் கோடி
வார்த்தவன் நீ...!
தேடுகிற உலகத்தில் தேடிப்போய்ப் பூத்தவன் நீ...!
கோயிலுக்குள் தமிழ்மொழியின் குயில் ஓசை
கேட்டவன் நீ...!
தூய மக்கள் தொண்டனாகவே தொடர் வெற்றி
கண்டவன் நீ...!

ஊசிமணி பாசிவிற்ற உள்ளங்கள் போற்றதற்கு
நேசமுடன் பயணிக்கும் திராவிடத் திருவிழா நீ...!
கிராமங்கள் எங்கெங்கும்சேமங்கள் என்றுரைக்க
மாமன்ற கிராம சபை மக்கள் முன்
படைத்தவன் நீ...!

பேச்சினிலே அண்ணாவை வீச்சினிலே
அய்யாவை
மூச்சினிலே கலைஞரையும் முழு வடிவம்
ஆனவன் நீ...!
பத்துகோடி தமிழர்க்கும் பாதுகாப்பு கேடயம் நீ...!
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும்
பொன் முகம் நீ...!

கோயில் நிழல் தொடாதோரைக்
கோயில் அர்ச்சகராய் நிற்க வைத்தாய் நீ...!
வாய் அமுத உணவு தந்து வான் வியக்க கற்க
வைத்தாய் நீ...!
சோர்விலாத சேசலிசம் நீ...! சூரியனின்
கம்யூனிசம் நீ...!

பார்வையிலே பாசிசத்தை வென்ற பைந்தமிழ்
விலாசம் நீ...!
நெருப்பினிலே நின்றவன் நீ...! நெடும் புயலை
வென்றவன் நீ...!
திருப்புமுனை உண்டாக்கி திசை வெளிச்சம்
கண்டவன் நீ...!
நிழல்கூட வீழ்ந்திடாமல் மக்களை நிதம் காப்பவன்
நீ...!

நெடுவானத் தமிழ் உலகைநெஞ்சமெலாம்
சுமப்பவன் நீ...!
எல்லோர்க்கும் பொதுவான எழில்வான
மாரியும் நீ...!

இல்லை எனச் சொல்லாத தற்காலப் பாரியும் நீ...!
வாய்ப்பாலே வந்தவனா நீ...!

வற்றாத உழைப்பாலே தாய்ப்பாலாய்
வந்தவன் நீ...!
தனிப்பெருங் கருணையும் நீ...!
சிறகில்லாப் பறவைகளைச் சேர்த்தணைக்க
வந்தவன் நீ...!
அரசு உள்ளாட்சிகளில் அரும் வாய்ப்பு
தந்தவன் நீ...!

போக்கெல்லாம் புனிதம் நீ...! போற்றுகிற
மனிதம் நீ...!
வாக்கில்லாச் சிறார்கட்கும் வானவில்லைத்
தந்தவன் நீ...!
பூதலத்தில் எங்குமில்லாப் புரட்சிமிகு
முதல்வன் நீ...!
மாதர்களே தெய்வமென்ற மகத்துவத்தின்
தலைவன் நீ...!

பன்னாடு பலஏடு பாராட்டும் செயலகம் நீ...!
கண்ணோடு கண்ணாகத் தமிழ்நாட்டைக்
காப்பவன் நீ...!
முதலீடு பலபெற்று முதல்நாடு என அமைத்து
உதவியோடு உணர்வோடு உலகு
புகழ் பெற்றவன் நீ...!



**முனைவர் சொற்கோ**
**இரா.கருணாநிதி**
பேராசிரியர் பாடலாசிரியர்



நாகை மாவட்டம் நாகை நகர விளையாட்டு அணி அமைப்பாளர் கே.கே.பரம் ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வளர்த்து வரும் இளம் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என் கௌதமன் வழங்கினார். உடன் நகர செயலாளர் நகர மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், வி.கமல், மற்றும் பாலா, நாகை நகர விளையாட்டு அணி அமைப்பாளர் கே.கே .பரம் உள்ளிட்டோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சி.கே.எழிலரசன் ஏற்பாட்டில் திருவாரூர் அரசு மருத்துவமனையில் 27.11.2025அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அணிவித்தார். மாவட்ட அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார், நகர செயலாளர்கள் வாரை. எஸ். பிரகாஷ்,எஸ். வி. பாக்கிரிசாமி, எஸ். கல்யாணசுந்தரம் மற்றும் அமைப்பாளர்கள் உடன் பங்கேற்றனர்.